மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# திருக்குறளில் சமுதாய அறம் ஓர் ஆய்வு

## A Study of Social Ethics in Thirukural

ரீனா தேவராஜ்/ Rhina Davaraj[1]
[1]B.Ed, Sultan Idris Education University
Corresponding Email: rhinadavaraj22@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

அறம், பொருள், இன்பம் சார்ந்த வாழ்வியல் பண்பாடுகளை உலகளவில் அரங்கேறச் செய்த பெருமை திருவள்ளுவரையே சாரும். மனிதர்களின் வாழ்க்கை முறையினை எடுத்துரைப்பது இந்நூலின் பயனாகும். அறத்தோடு பொருள் ஈட்டி இன்பம் கண்டால் வீடுபேறடையலாம் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும். இந்த ஆய்வின் நோக்கம், திருக்குறளில் சமூகவியல் தொடர்பான செய்திகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதைக் கண்டறிவதும், சமூகவியலில் தனிமனிதன், குடும்பம், நம்பிக்கை, கல்வியும் ஒழுக்கமும், தொழில், மக்களின் நிலை எனும் கூறுகளில் திருக்குறளைப் பகுத்தாய்தலாகும். திருக்குறளுக்கு உரை எழுதியவர்களுள் மு.வரதராசனாரின் உரையைக் கொண்டே ஆய்வாளர் இந்த ஆய்வை நகர்த்தியுள்ளார். இந்த ஆய்வுக் கட்டுரையின் முதல் நோக்கம் விளக்குவியல் முறையிலும், இரண்டாம் நோக்கம் பகுப்பாய்வு முறையிலும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. ஆய்வுக் கண்டுப்பிடிப்பில், சமுதாயத்தில் அறத்தின் வழுமையும், அறத்தோடு வாழ்வதனால் தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் ஏற்படும் நன்மைகளும் கண்டறியப்பட்டன. தனிமனித வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சியென்றும் அவற்றின் வாயிலாகப் பண்பாடு, நாகரீகம் போன்றவை வெளிப்படுகிறது என்பதும் இந்த ஆய்வின் வழி கண்டறியப்பட்டன.

**கருச்சொற்கள்:** திருக்குறள், சமுதாய அறம்

**Abstract**

Thiruvalluvar is credited with bringing about the culture of life based on virtue, materialism and happiness all over the world. The purpose of this book is to explain the way of life of human beings. Thiruvalluvar is of the opinion that one can attain home if one gains wealth with righteousness and finds happiness. The purpose of this study is to find out how the messages related to sociology are located in Thirukkural and to analyze thirukkural in terms of individual, family, faith, education and morality, profession, and the condition of the people in sociology. The researcher has moved this analysis with the speech of M. Varadarajan, one of the authors of thirukkural. The first purpose of this paper has been examined in an explanatory method and the second purpose is analytical. In the study findings, the flaw of morality in society and the benefits of living ethically to the individual and society were discovered. The development of the individual is the development of the country through which culture, civilization, are expressed by this study.

**Keywords:** Thirukkural, sociology

**முன்னுரை**

நம் முன்னோர்கள் இலக்கியத்தின் வழி தனிமனிதச் சமூகத்திற்கும், தனக்கும் செய்யவேண்டிய செயல்கள் அனைத்தையும் அறமாகவே கருதியிருந்தனர். பண்டையத் தமிழ் இலக்கியத்தின் வழி அறக்கருத்துகளைத் தங்கள் அன்றாட வாழ்வில் அதிக அளவில் பயன்படுத்தியும் அதைப் பாதுகாத்தும் வந்தனர்.

அறம் என்னும் சொல்லின் பொருள் காலப்போக்கில் பல்வேறு பொருள்களை உணர்த்துகின்ற பொருள் செறிவு வாய்ந்த சொல்லாக விளங்குகின்றன. கொடை, அன்பு, ஈகை, இல்லறம், துறவறம் என அனைத்தும் சேர்த்து ஒழுகவேண்டியதே அறம் என்றும் கூறப்படுகின்றன. ஆனால், அறத்திற்கு இதுவே சரியான பொருள் எனத் தெளிவான கூற்று எங்கும் எழுதப்படவில்லை. திருவள்ளுவரும் அதற்குத் தீர்க்கமான காரணத்தைக் கூறாததற்கான காரணம் அறம் என்பது காலத்திற்குக் காலம் மாறி வரும் மரபினைச் சார்ந்தது என்பதை வள்ளுவர் உணர்த்தியிருந்தார்.

இரண்டடியில் எழுதப்பட்ட திருக்குறள் மிக நுட்பமான பல அரிய கருத்துகளைக் கொண்டது. திருக்குறள் அறம், பொருள், இன்பம் எனும் முப்பாலால் எழுதப்பட்டுள்ளது. இவ்வுலகத்தில் நற்செயல்களை எடுத்துக்கூறி அறத்தினை வளர்ப்பதே நூலின் கடமையாகும். அவ்வகையில், திருக்குறள் மக்களின் இன்றியமையாத பண்பு நலன்களை எடுத்துரைத்து ஒரு மனிதன் தான் வாழும் சமூகத்தில் எத்தகைய குணநலன்களைப் பெற்றுத்திகழ வேண்டும் என்று அறிவுறுத்துகிறது.

மு.வரதராசன் திருக்குறளை இக்காலத்திற்கேற்ப பொழிப்புரை எழுதியவராவார். இவரது ‘திருக்குறள் தெளிவுரை’ மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. இவர் இக்கால மக்களின் தேவையைக் கருதி உரைசெய்த சிறப்புப் பெற்றவராவார்.

**ஆய்வு நோக்கம்**

i. திருக்குறளில் சமூகவியல் தொடர்பான செய்திகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதைக் கண்டறிதல்.
ii. சமூகவியலில் தனிமனிதன், குடும்பம், நம்பிக்கை, பழக்க வழக்கம், தொழில், பண்பாட்டுக் கூறுகள், சமூதாய மேம்பாட்டுப் பணிகள் எனும் கூறுகளில் திருக்குறளைப் பகுத்தாய்தல்.

**ஆய்வு எல்லை**

திருக்குறளுக்கு உரை எழுதியவர்களுள் மு.வரதராசனாரின் உரையைக் கொண்டே ஆய்வாளர் இந்த ஆய்வை நகர்த்தியுள்ளார்.

**ஆய்வுக் கண்டுபிடிப்பு**

தனிமனிதர்கள் பலரைக் கொண்டதுதான் குடும்பமாகவும், அவர்களின் செயல்கள் அம்மனிதரை மட்டுமல்லாது சமூகத்துடன் இணையும் போது, ஆவர்களுக்கென்று சில அறங்களை மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறது. அவை தான் சமுதாய அறங்கள் எனப்படுகிறது.

**தனிமனிதன்**

ஒன்றுபட்டு வாழும் மக்கள் கூட்டத்தில் ஓர் உறுப்பினராகத் திகழ்பவன் மனிதன். தனிமனிதன் ஒருவன் தம்முடைய இன்பத் துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள மற்றொருவரின் உதவி தேவைப்படுகிறது. மனிதன் தன்னந்தனியானவன் அல்ல. அவன் மண் முதல் இறைவரை தொடர்புடையவன்; அகிம்சையில் உறைபவன்; அருளாளன் எனத் திரு.வி.க கூறுகின்றார். மனிதருக்குரிய பண்பினையே 'பகுத்தறிவு' என்கின்றனர். "மனிதர்களின்றேல் சமூகமில்லை", சமூகத்திலிருந்து விடுபட்டு தனித்தியங்கக்கூடிய தனிமனிதனுமில்லை என்ற கூற்று உண்மையாகும் என்று பாஸ்கல் இயம்புகிறார்.

**குடும்பம்**

எல்லாச் சமூகங்களிலும் குடும்பத்தில் உள்ள அடிப்படையான அமைப்பு, தாய், தந்தை, குழந்தைகள் அடங்கிய தனிக்குடும்பம் ஆகும். இவ்விதக் குடும்பத்தின் அமைப்பு சமூக வழக்காலும் சமயத்தாலும் கட்டுப்படுத்தப்படும் உறவு குடும்பத்திலிருந்து ஏற்படுகிறது. அன்புடன், கூடி வாழ உருவாக்கப்பட்ட சமூக அமைப்பே குடும்பமாகும். இவை தங்களுக்குள் இரத்த உறவுகளை ஏற்படுத்தி மிக நெருக்கமான சூழ்நிலையை உருவாக்குகிறது. இப்பண்பு நலன்களே சமூக நலத்திற்கு அடிப்படையாகிறது என்பதை

அன்பினும் ஆர்வம் உடைமை அதுஈனும்

நண்பென்னும் நாடாச் சிறப்பு (குறள் 74)

என்று இக்குறளில் விளக்குகிறார் வள்ளுவர்.

**நம்பிக்கை**

மக்கள் தாங்கள் செய்யும் அனைத்துச் செயல்களையும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்தார்கள். வீர வாழ்க்கை வாழ்ந்து தாம் செய்ய வேண்டிய கடமைகளைச் செவ்வனே முடித்தவர்கள் விண்ணுலகம் செல்வர் என்பதைத் திருவள்ளுவர்,

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்

போற்றாது புத்தே ளுலகு (குறள் 234)

என்னும் குறளில் தேவலோகம் என்று மக்களின் நம்பிக்கையைக் கூறியுள்ளார். மேலும், இன்று மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கும் “பேய்” என்பது அக்கால மக்களிடம் வழக்கத்தில் இருந்தமையைத் தம் குறளில்

அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்

போய்கண் டன்ன துடைத்து (குறள் 565)

எனக் குறிப்பிடுகிறார்.

**கல்வியும் ஒழுக்கமும்**

ஒருவரின் அறியாமையை அகலச் செய்வதில் கல்வி கேள்விக்கு இன்றியமையாத பங்குண்டு. ஆகவே, தாம் கற்றதை வாழ்வில் கடைபிடிக்க வேண்டுமென்பதை,

கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக (குறள் 391)

என மொழிகிறார். “கல்வியைக் குறித்த வள்ளுவருடைய சிறப்பான கருத்து கல்வியும் கேள்வியும் அறிவும் ஒருவனை நல்வழிப்படுத்த வல்லவனாக இருத்தல் வேண்டுமென்பதே கல்விக்கும் ஒழுக்கத்திற்கும் தொடர்பில்லையென வள்ளுவர் கருதவில்லை. இரண்டும் இணைந்து ஒன்றே எனக் கருதினார். கற்றவனிடம் அறிவும் ஒழுக்கமும் இணையும் பொழுது இல்வாழ்க்கை சிறக்கிறது. வள்ளுவர் காலத்தில் அறிவியல் மற்றும் கலைத்துறைக் கல்வி வளர்ச்சியுற்று இருக்க வேண்டும்.

**தொழில்**

இல்வாழ்வான் தாம் செய்ய வேண்டிய கடமைகள் அனைத்திற்கும் பொருள் இன்றியமையாதது. அப்பொருளையும் அறவழியில் ஈட்ட வேண்டும் என்பதை வள்ளுவனார்,

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை

வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல் - குறள் 44

இக்குறளின் வாயிலாகக் குடும்பத்தை ஆளுகின்ற தலைவனின் பண்பு நலன்கள் கூறப்படுகிறது. இல்வாழ்வானுடைய கடமைகளுள் தலைசிறந்தது இயல்புடைய மூவரைப் போற்றுதல், மனைவியுடன் இல்வாழ்க்கைப் பணிகளைச் செம்மையுறச் செய்தல், சிற்றின்பத்தினை எண்ணாமை, தான்பெற்ற மக்களைச் சிறந்த சான்றோனாக்க நல்வழியில் பொருளீட்டி மேற்கண்ட புறக்கடமைகளைச் செம்மையுற ஆற்றவேண்டும் என்பதையும் இக்குறளில் எடுத்தியம்புகிறார் திருவள்ளுவர்.

**மக்களின் நிலை**

உணவின்மைதான் அனைத்துக் குற்றங்களுக்கும் காரணம். தம்மிடமுள்ள அனைத்துக் குணநலன்களையும் பசி அழித்தொழிக்கும் என்பதனை நல்வழிப்பாடல் உணர்த்துகிறது. உணவளிப்பதன் மூலம் பசிப்பிணியைத் துரத்த முடியும். வறுமையின் பண்புகளை வள்ளுவர் நல்குரவு என்னும் அதிகாரத்தில் விளக்கியுள்ளார். இவ்வுலகில், துன்பத்திற்கெல்லாம் மேலான துன்பத்தினை,

> இன்மையின் இன்னா யதெனின் இன்மையின்
> இன்மையே இன்னா தது – குறள் 1041

என்று வறுமையின் கொடுமையை இக்குறளின் வழி வள்ளுவர் விளக்கியுள்ளார். இத்தகைய துன்பத்தோடு வாழ்வதென்பது மிகவும் கொடுமையானது. இவ்வாறானத் துன்பத்தை ஒருமுறை அடைய நேர்ந்தால் இம்மை இன்பமும் மறுமை இன்பமும் இல்லாமல் போகும் என்பதனை,

> இம்மை எனவொரு பாவி மறுமையும்
> இம்மையும் இன்றி வரும் – குறள் 1042

இக்குறளில் வள்ளுவர் விளக்கிக் கூறியுள்ளார். வறுமை நிகழ்கால, எதிர்காலத்திற்கு மட்டும் துன்பம் தருவதில்லை இப்பிறவிக்கும் அடுத்தப் பிறவிக்கும் துன்பத்தைத் தருவதோடு ஒருவரின் நற்பண்பினையும் கெடுக்கும். பொருளுடையவர்களே இந்த உலகம் போற்றிப் புகழ்வதோடு, வறுமையின் துன்பத்தினை,

> நெருப்பின்னுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுஞ்
> யாது தொன்றும் காண்ப தரிது - குறள் 1049

இக்குறளில் வள்ளுவர் நெருப்பின்னுள் உறங்குதல் கடினம். அதைவிடத் துன்பம் வறுமையில் வாழ்வது எனத் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**நிறைவுரை**

திருக்குறளில் அறத்தின் கூற்று நல்வாழ்வை வாழ விரும்பும் அனைவருக்கும் சிறந்த வழிகாட்டியாக அமைகிறது என்பதை இந்த ஆய்வின்வழி கண்டறியமுடிகிறது.

**துணைநூற்பட்டியல்**


Jasinthan. (2021, May 30). சிறுவர் நேரம். Retrieved from திருக்குறள் கூறும் தருமம் அறம்: https://www.kidhours.com/thirukural-tamil-kids-siruvar-neram/

அறம் என்றால் என்ன. (2023, 4 26). Retrieved from தமிழ் டிப்ஸ்: https://alltamiltips.com

கு.அழகர்சாமி. (2012, June 18). திண்ணை. Retrieved from திருக்குறளில் அறம்- ஒருங்கிணைந்த புரிதலுக்கான வாசிப்பு: https://puthu.thinnai.com/archives/12371

கோ.வசந்திமாலா. (2020, October 13 ). அரண். Retrieved from அறம் போற்றும் வாழ்வியல்: https://www.aranejournal.com/article/5890

திருக்குறள் மூலமும் மு.வரதராசனார் உரையும். (2018, 12 12). Retrieved from தமிழ் இணையக் கல்விக்கழகம்: https://www.tamilvu.org/ta/library-l2100-html-l2102vur-128301